**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093806

1. District : நீலகிரி
   மாவட்டம்
   PS: V&AC
   காவல்நிலையம்
   Year: 2019
   ஆண்டு
   FIR No.: 06/19
   மு.த.அ. எண்
   Date: 13.10.19
   நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended — Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: by the PC (Amendment) — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Act 2018 — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from : நாள் முதல்
   Date to : நாள் வரை 26.09.19, 10.10.19
   Time Period : நேர அளவு
   Time from : நேரம் முதல்
   Time to : நேரம் வரை
   (b) Information Received at PS Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.10.19
   Time : நேரம் 17.20
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 13.10.19
   Time : நேரம் 19.00

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக
   கண்ணியமாக நடப்பு செய்யப்பட்ட புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS : குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   சுமார் 55 கி.மீ தென் கிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி கிராம நிர்வாக அலுவலகம், வாழ்வார் மங்கலம் கூடலூர் வட்டம்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
   District : மாவட்டம் நீலகிரி மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் பொன்னுராஜ்
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பழனியாண்டி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1976
   (d) Nationality : நாட்டினம்
   (e) Passport No : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் கூலி
   (g) Address : முகவரி கண்ணம்பாளையம் வாழ்வார் மங்கலம் ஸ்ரீமதுரை போஸ்ட் அஞ்சல், நீலகிரி மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   த.டு. காளியப்பன்
   கிராம நிர்வாக அலுவலர்
   வாழ்வார் மங்கலம், கூடலூர் வட்டம்
   நீலகிரி மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / Involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்தனுப்படுகிறது.

கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 13.10.2019 ஆம் தேதி 17.20 மணிக்கு நிலையத்தில் இருந்த போது கரூர் மாவட்டம், மஞ்சப்புளிப்பட்டி அஞ்சல், வாழ்வார்மங்கலம், கண்ணிமார்பாளையத்தைச் சேர்ந்த பழனியாண்டி மகன் பொன்னுச்சாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த, கம்பியூட்டர் மூலம் தயார் செய்த புகாரை பெற்று கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு, அனுப்புநர் P.பொன்னுச்சாமி, த/பெ.பழனியாண்டி, கண்ணிமார்பாளையம், வாழ்வார்மங்கலம், மஞ்சப்புளிப்பட்டி அஞ்சல், கரூர் மாவட்டம், பெறுநர் உயர்திரு இன்ஸ்பெக்டர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, கரூர், அய்யா, நான் மேற்கண்ட விலாசத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளனர். எனக்கு எழுதப்படிக்க தெரியாது. கையெழுத்து போடுவேன். நானும் எனது மனைவியும் 100 நாள் வேலை திட்டத்தில் கூலி வேலை செய்து வருகிறோம். எனது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

பொன்னுசாமி

[signature] 13/10/19

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Name: பெயர் ஜெ. ஜோதிராணி
Rank: நிலை ..................No. எண் .........
காவல் ஆய்வாளர்
ஊ. த. க. பிரி.
கரூர்.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
13.10.19 at 19.45

**Continuation of Karur Vigilance and Anti-Corruption FIR in Cr.No. 06/2019.**

தந்தை திரு. பழனியாண்டி கடந்த 2009 ஆம் வருடம் இறந்துவிட்டார். எனக்கு ஒரு தம்பி மற்றும் ஒரு தங்கை உள்ளனர். எனது தாய் திருமதி. உருமாயி என்னுடன் வசித்து வருகிறார். நாங்கள் கடந்த 10 வருட காலமாக வாரிசு சான்று கேட்டு விண்ணப்பிக்கவில்லை. தற்போது எங்களுடைய அப்பா பெயரில் உள்ள பூர்வீக சொத்துக்களை நானும், எனது தம்பியும் பிரித்துக் கொள்வதற்காக வாரிசு சான்று தேவைப்பட்டது. அதனால் கடந்த 04.09.19 ஆம் தேதி வாழ்வார்மங்கலம் பஞ்சாயத்து அலுவலகத்தில் நடைபெற்ற ஜமாபந்தியில் வாரிசு சான்று கேட்டு மனு கொடுத்திருந்தேன். அதன் பின்னர் வாழ்வார்மங்கலத்தில் உள்ள கிராம நிர்வாக அலுவலர் திரு.காளியப்பன் என்னை சந்தித்து, ஜமாபந்தியில் நான் கொடுத்த மனு அவரிடம் வந்திருப்பதாகவும், மேலும் E – சேவை மையத்தில் மீண்டும் ஒரு முறை விண்ணப்பிக்குமாறும் கூறினார். அவர் கூறியதின்பேரில் 25.09.19 தேதி கொசூரில் உள்ள E – சேவை மையம் சென்று வாரிசு வேண்டி விண்ணப்பித்தபோது அவர்கள் என்னுடைய தாத்தா மருதைக்கவுண்டர் மற்றும் பாட்டி உருமாயி ஆகிய இருவரும் இறந்துவிட்டார்கள் என்பதற்கான சான்று பெற்று வருமாறு கூறினார். நானும் அன்றைக்கே கிராம நிர்வாக அலுவலர் திரு.காளியப்பன் அவர்களை சந்தித்து, E – சேவை மையத்தினர் கூறியதை போல் தாத்தா மற்றும் பாட்டி இருவரும் இறந்துவிட்டதற்கான சான்று வேண்டும் என்று கேட்டேன். அதற்கு கிராம நிர்வாக அலுவலர் திரு. காளியப்பன் எனது தாத்தா மற்றும் பாட்டி இறந்துவிட்டதாக வெள்ளைத்தாளில் எழுதி கையெழுத்து போட்டு, அலுவலக முத்திரை வைத்து கொடுத்தார். நான் அந்த சான்றை பெற்றுக் கொண்டு, மீண்டும் 26.09.19 தேதி கொசூரில் உள்ள E – சேவை மையம் சென்று வாரிசு சான்று வேண்டி விண்ணப்பம் செய்து, அதற்குண்டான ஒப்புகை சீட்டை பெற்றுக் கொண்டேன். பின்பு அன்றைக்கே மதியம் சுமார் 03.00 மணிக்கு வாழ்வார்மங்கலத்தில் உள்ள கிராம நிர்வாக அலுவலரான திரு. காளியப்பன் அவர்களை அவருடைய அலுவலகத்தில் சந்தித்து, E – சேவை மையத்தில் விண்ணப்பித்த தகவலை தெரிவித்து, எனக்கு வாரிசு சான்றிதழை பெற்றுத்தருமாறு கேட்டேன். அதற்கு அவர் உங்கள் மனு சம்மந்தமாக எனது பரிந்துரை அறிக்கையினை மேலே அனுப்பி வாரிசு சான்று கிடைக்க ஏற்பாடு செய்வதற்கு ரூ.10,000/- பணம் கொடுங்கள் என்று கேட்டார். நான் உடனே இது அரசுக்கு கட்டவேண்டிய பணமா என்று கேட்டேன். அதற்கு கிராம நிர்வாக அலுவலர் திரு.காளியப்பன் உங்களுக்கு விபரம் இல்லை. உங்களுக்கு வாரிசு சான்று கிடைக்க எனக்காகும் செலவு என்று கூறினார். நான் அவ்வளவு பணம் கொண்டுவரவில்லை என்று சொல்லி, பிறகு வருகிறேன் என்று கூறி வந்துவிட்டேன். பின்பு பணம் புரட்ட முடியவில்லை, சுமார் 2 வாரம் கழித்து

மீண்டும் 10.10.19 தேதி காலை சுமார் 11.30 மணிக்கு வாழ்வார்மங்கலம் கிராம நிர்வாக அலுவலர் திரு.காளியப்பன் அவர்களை, அவரது அலுவலகத்தில் சந்தித்து என்னுடைய விண்ணப்பம் சம்மந்தமாக கேட்ட போது, நான் கேட்ட பணம் கொண்டுவந்திருக்கிறாயா என்று கேட்டார். அதற்கு நான் அவ்வளவு பணம் என்னால் புரட்டமுடியவில்லை. நானே 100 நாள் வேலை திட்டத்தில் கூலி வேலை செய்து பிழைத்து வருகிறேன். தயவு செய்து கொஞ்சம் குறைத்து கொள்ளுங்கள் என்றும், சிறுது கால அவகாசம் கொடுக்கும்படியும் நான் கெஞ்சி கேட்டுக் கொண்டேன். அதற்கு ரூ.1000/- குறைத்துக் கொண்டு ரூ.9,000/- உடன் 14.10.19 ஆம் தேதி திங்கள் கிழமை காலை அவருடைய அலுவலகத்தில் வந்து பார்க்கும்படியும், இல்லையென்றால் என்னுடைய மனுவை கிடப்பில் போட்டுவிடுவேன் என்றும் கறாராக கூறினார். நான் பணத்தை புரட்டிகொண்டு வருகிறேன் என்று கூறி வந்துவிட்டேன். எனக்கு வாரிசு சான்று கிடைக்க தனது பரிந்துரையினை அனுப்பி வாரிசு சான்று பெற்றுத்தருவதற்கு ரூ.9000/- லஞ்சமாக கேட்ட கடவூர் வட்டம், வாழ்வார்மங்கலம் கிராம நிர்வாக அலுவலரான திரு.காளியப்பன் அவர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுத்து வாரிசு சான்று பெற நான் விரும்பவில்லை. எனவே, கடவூர் வட்டம், வாழ்வார்மங்கலம் கிராம நிர்வாக அலுவலரான திரு.காளியப்பன் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கேட்டு இன்று 13.10.19 தேதி நான் வந்து இந்த புகார் மனுவினை கொடுக்கின்றேன். மேலும் கிராம நிர்வாக அலுவலர் திரு.காளியப்பன் அவர்கள் கேட்ட லஞ்சப் பணம் ரூ.9000/- கொண்டு வந்துள்ளேன். இம்மனுவுடன் என்னுடைய விண்ணப்பத்துடன் இணைத்து கொடுத்த எனது தந்தையின் இறப்பு சான்றிதழின் நகல், தாத்தா மற்றும் பாட்டி இருவரும் இறந்துவிட்டதற்கான கிராம நிர்வாக அலுவலரால் கொடுக்கப்பட்ட சான்றின் நகல், E – சேவை மையத்தில் வாரிசு சான்று வேண்டி விண்ணப்பம் செய்ததற்குண்டான ஒப்புகைச் சீட்டு, எனது ஆதார் அட்டையின் நகல் ஆகியவற்றை இணைத்துள்ளேன். நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd/- P.பொன்னுச்சாமி, 13.10.2019. Sir, Received the complaint on 13.10.2019 at 17.20 hrs. A confidential verification has been conducted in respect of the complaint through sources. Complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the Superintendent of Police, Southern Range, DVAC, Chennai. I am registering a case in Karur V&AC Cr.No.06/2019, u/s. 7 of PC Act 1988 as amended by the PC (Amendment) at 2018 on 13.10.2019 at 19.00 hrs and took up investigation Sd/- J.Rupageetharani, 13.10.2019, (J.Rupageetharani) Inspector of Police, V&AC, Karur.

இதன் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் திரு. பொன்னுச்சாமி அவர்களின் அசல் புகார் மனு ஆகியவற்றை இணைத்து மேன்மைமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்ற நடுவர், கரூர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன்.

13/10/19

(ஜெ.ரூபாகீதாராணி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
கரூர்
13.10.2019.